MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# திருமுருகாற்றுப்படையில் வழிப்பாட்டு முறைகள்

**திருமதி இர.கிருஷ்ணவேணி ,**
**தமிழ்த்துறை,உதவிப்பேராசிரியர் ,**
**தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),சிவகாசி.**

DOI 10.5281/zenodo.12795650.

**Abstract :**

Allusions to deity and worship in Sangam literature flash like golden threads at appropriate places. People worshiped the deity in two ways. One is natural worship and the other is Vedic worship. This is called 'Hard' and 'Soft' respectively. The aim of this article is to examine these cults through the Thirumurugaartuppadai book.

Key Words : Sangam literature - Thirumurugaattuppadai - Worship

## முன்னுரை:

சங்க இலக்கியங்களில் தெய்வம் பற்றிய குறிப்புகளும் ,வழிபாடு பற்றிய குறிப்புகளும் ப்ட்டில் பொன் இழைப் போன்று பொருத்தமான இடங்களில் மிளிர்கின்றன. தெய்வத்தை மக்கள் இரண்டு முறைகளில் வழிபட்டனர். ஒன்று இயற்கை வழிபாட்டு முறை மற்றொன்று வேதவேள்வி முறை. இதனை,முறையே ‘ வன்வழிபாடு ‘ என்றும் ‘மென்வழிபாடு’ என்றும்கூறுவர். இவ்வழிபாட்டு முறைகளைத் திருமுருகாற்றுப்படை நூலின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## வன்வழிபாடு ,மென்வழிபாடு :

வன்வழிபாடு என்பது பழங்கால மக்களின் தொடக்கநிலை வழிபாடுகளான, உயிர்பலியிடுதல், வெறியாட்டயர்தல், இசைக்கருவிகள் இசைத்து வழிபடுதல் போன்றவற்றை இயற்கையோடு இயைந்த வழிபாட்டு முறை என்பர்.

மென்வழிபாடு என்பது ,அந்தணர்கள் ஓதும் வேள்விமுறை , மந்திரம் செபித்தல் முதலியன பிற்காலத்தவை.

## வழிபாடு பற்றித் தொல்காப்பியர் :

‘வழிபடு தெய்வம்’, ‘வழிபாடு மறுத்தல்’, ‘வழிபடு கிழமை’ என்று தொல்காப்பியர் வழிபாட்டைப் பற்றிக் கூறுகிறார்.சங்க இலக்கிய நூலான புறநானூற்றில் ‘வழிபடுவோரை வல்லறித் தீயே’ என்று வழிபாடு பற்றி மொழிகிறது. இதனால் தெய்வத்தை மக்கள் வழிபடுவது பண்டைக் கால மரபாக உள்ளது. மேலும்,அந்தணர்கள் ஓதும் முறைப் பற்றித் தொல்காப்பியம்,

**“அகத்து எழு வளியிசை அரில்தப நாடி**


http://Creativecommons.org//license/by/4.0/.

**அளவில் கோடல் அந்தணர் மறைத்தே**
**அஃது இவண் நுவலாது எழுந்து புறத்திசைக்கும்**
**மெய்தெரி வளியிசை அளவு நுவன்றிசினே.” (தொல் - பிறப்- 21.)**

என்று கூறுகின்றது.

**முருக வழிபாட்டின் தொடக்கம்:**

‘ முருகு ’ என்ற சொல்லிற்கு அழகு , இளமை என்பது பொருள். பழங்காலத் தமிழ் மக்கள் இயற்கையின் ஒவ்வொரு பொருளிடத்தும் அழகினையும் ஆற்றலையும் ஊடுருவிப் பார்த்தனர். பின்னர் தனிமனிதச் சிந்தனை வளர்ந்த போது ‘முருகு ’என்பதை முருகன் என்ற பெயரில் வழிபடத் தலைப்பட்டனர்.

- இன்றைய முருகவழிபாடு என்பது ,வடஇந்தியாவில் வழங்கிய கந்த வழிபாடு ,தமிழ்நாட்டில் பிறந்த முருக வழிபாடு , கிழக்கிந்தியப் பகுதிகளில் வழங்கிய கார்த்திகேய வழிபாடு எனப் பலவகை வழிபாடுகள் ஒன்றாகக் கலந்து , ஒரு தெய்வ வழிபாடாகப் பரிணமித்தவை. இப்பலவகை வழிபாட்டினை இணைக்கும் விதமாகத் திருமுருகாற்றுப்படை எழுந்தது எனவும் கூறலாம்.

**இயற்கையோடு இயைந்த நிலை :**

சங்க காலத்தில் வழிபாட்டு முறைகளில் முக்கிய அம்சமாக இயற்கையோடு இயைந்து வழிபடும் நிலை காணப்பட்டது. சுருங்கக்கூறின் ஒரு குறிப்பிட்ட இனக்குழு மக்கள் ,என்ன வகையான உற்பத்தி முறையைச் சார்ந்து இருக்கின்றனரோ , அதைப் பொறுத்தே அவர்கள் வழிபடும் தெய்வங்களின் வடிவங்களாகவும் , குணங்களாகவும் அமைந்திருக்கின்றனர். தொல்காப்பியர் நிலம் பற்றிக் கூறுகையில்,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்” (தொல் - அகத்- 4)**

என்று, நிலம் சார்ந்து தெய்வங்களைக் கூறுகின்றார். இவற்றுள் குறிஞ்சிக்குரிய தெய்வமாக முருகவேளைக் கூறியுள்ளார்.

**வெறியாட்டயர்தல்:**

இவ்வழிபாட்டில் வேலைக் கையில் ஏந்தி முருகவேளைப் போற்றி அழைத்துக் கொண்டே ,வேலன் வெறியாட்டயர்வோன் ஆடுவான். அவன் தன் உணர்வை வெளிப்படுத்துவதற்கு மொழியைக்


http://Creativecommons.org//license/by/4.0/.

கருவியாகப் பெரிதும் எதிர்பார்க்கவில்லை. முகஉணர்வினால் ,சைகையினால் விளக்கினான் , என்பதை நக்கீரர் ,

**“கொடுந்தொழில் வல்வில் கொலையிய கானவர்**
**நீடு அமை விளைந்த தேக் கட்தேறில்**
**குன்றக் சிறுபறைக் குரவைஅயர “ (தி-ஆ-194-197)**

மற்றும் ‘வேலன் வெறி அயர் வியன் களம் ’என்று அகநானூறு மொழிகிறது.

**உயிர் பலி இடுதல்:**

பண்டையக் கால இனக்குழு மக்களின் சமயவழிபாட்டில் முக்கியக் கூறாக உயிர் பலியிடுதலை அனுமதித்தனர். உயிர்பலி வழிபாட்டில் தொடக்கநிலையாக இருந்தது என்பர். உயிர்பலியிடுவதால் நன்மை உண்டாகும் எனக் கருதினர். உயிர்பலி பற்றி தொல்காப்பியம்,

**“ஒல்லார் நாண பெரியவர்க் கண்ணிச்**
**சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்து**
**தொல்லுயிர் வழங்கிய அவிப் பலியானும் ” (தொல்-1022)**

என்று தன் நாட்டு வெற்றிக்காக வீரன் ஒருவன் தீயை வளர்த்து, அத்தீயில் உயிர்நீத்த நிகழ்வைக் காட்டுகிறது. நக்கீரர்

**’சிறுதிணை மலரொடு விரைஇ மறுஅறுத்து’**
**’குருதியொடு விரையிய துூவெள் அரிசி’**
**’குருதிச் செந்திணை பரப்பி ’ (தி.ஆ - 218, 233 ,242) .**

என்ற வரிகளில் வரையாட்டினை அறுத்து அதன் ஊனினைக் குருதியொடு ,தூய வெண்ணெல் அரிசியை விரவி தேக்கிலையில் இட்டுப் படைப்பார்கள். இவற்றின் மூலம் தங்கள் உண்ணும் புலால் உணவையே , தாங்கள் வழிபடும் கடவுளர்க்கும் படைத்து வழிபட்டனர்.

**இசைக்கருவிகள் இசைத்து வழிபடல்:**

பக்தி உணர்வை மிகுவிக்க இசைக் கருவிகளின் இசைத் தூண்டுகோலாகப் பயன்பட்டது. குழல்,யாழ் , முழவு ,தொண்டகப்றை ,பம்பை ,உடுக்கை முதலிய கருவிகள் வழிபாட்டின் போது இசைக்கப்பட்டன. இதனை,

**“அந்தரப் பல்இயம் கறங்கத் திண்காழ்**
**வயிர் எழுந்து இசைப்ப” (தி - ஆ -119)**

என்றும்,

**“இமிழ் இசை அருவியோடு இன்னியம் கறங்க ”(தி - ஆ - 240)**

என்றும் மொழிந்துள்ளார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

**பூவும் ,புகையும்:**

வன்வழிபாட்டிலும் ,மென்வழிபாட்டிலும் பொதுவான வழிபாட்டு முறையாகப் பூவும், புகையும் கொண்டு வழிபடும் முறை இருந்துள்ளது. என்பதை நவிலும் விதமாக,

**"பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சி"** (ம.கா - 466)

மலர்கொண்டும் ,புகையினையினை எழுப்பி வழிபட்டதை மொழிகிறது. திருமுருகாற்றுப்படையில்

"நறும்புகை எடுத்துக் குறிஞ்சிப்பாடி "என்று குறிஞ்சிக்கடவுளைப் போற்றினர்.

**வேதவேள்வி முறை:**

வேத வேள்வி முறை சங்ககால மக்களின் மரபாகக் கருதப்படவில்லை. ஆயினும் சங்கஇலக்கியங்களின் இவ்வகையான வழிபாடுகள் பற்றி பயின்று வந்துள்ளன. அந்தணர்கள் இயற்றிய வேள்விகளாக சதுரவடிவம் ,அரை வட்ட வடிவம் ,முக்கோண வடிவம் என மூன்று வகையான வேள்விமுறைகள் இயற்றி முருகவேளை வழிபட்டத்தை , நக்கீரர் ," மூன்று வகை குறித்த முத்தீ " என்று மொழிகிறார்.

**உபவாசம் மேற்கொள்ளல்:**

உண்ணாநோன்பு மேற்கொண்ட விரத நிகழ்ச்சியை ,

**"நன்பகல் பலவுடன் கழிந்த உண்டியர் "**

பகலும் ,இரவும் உபவாசம் நோற்கும் விரதியரைக் கூறுகிறது.

**மந்திரம் செபித்தல்:**

மந்திரம் செபிப்பது சங்ககால மரபு இல்லை. அந்தணர்கள் ஆறெழுத்து மந்திரத்தை உச்சரித்த வழிபாட்டு முறையினை ,

**"ஆறெழுத்து அடங்கிய அருமறைக் கேள்வி**
**நாவியன் மருங்கின் நவிலப்பாடி "(தி.ஆ** -186 - 187)

**முருகன் பெருந்தெய்வமா? சிறுதெய்வமா** ?:

முருகப்பெருமானை இயற்கைவழி சார்ந்து தமிழ் மரபில் வழிபடுவதால் சிறுதெய்வம் என்றும் வேதவேள்வி முறையில் வழிபடுவதால் பெருந்தெய்வம் என்றும் கூறுவர்.

பெருந்தெய்வம் ,சிறுதெய்வம் என்ற சொற்களை உயர்ந்தவை , தாழ்ந்தவை என்ற பொருளில் கொள்ளாது , சிறுதெய்வம் எனப்படுவை பழைய நம்பிக்கைகளையும் , உணர்வுகளையும் பேணி நிற்பவை எனலாம் .

இச்சிறுதெய்வ வழிபாட்டில் நாள்தோறும் ஆறுகால பூசை நடைபெறுவதில்லை. இவற்றின் திருவிழாக்களில் சாமியாட்டம் ,இரத்தப்பலி போன்றவை நடைபெறும்.

தொல்காப்பியத்தில் தெய்வங்களை நிலம் சார்ந்து காட்டியுள்ளார். தவிர, பெருந்தெய்வம் என்றோ, சிறுதெய்வம் என்றோ பாகுபடுத்தப்படவில்லை .


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

பின்னை வந்த வடமொழி கலப்பால் பெருந்தெய்வங்கள் ,சிறுதெய்வங்கள் என்ற பிரிவுகளோடு அமைந்தன. குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனுக்குத் தற்போதைய வழிபாடுகளில் இரத்தம் பலியிடும் வழக்கம் இல்லை. வெறியாட்டும் இசைக்கருவிகள் இசைத்து வழிபடும் வழக்கம் மட்டுமே தற்பொழுது உள்ளது. முருகனைப் பெருந்தெய்வமாக மாற்றப்பட்டுப் பல புராணகதைகளும் இயற்றப்பட்டன என்பது விளங்குகின்றன.

**நிறைவுரை:**

மணிபிரவாள நடையைப் போன்று ,வன்வழிபாட்னையும் மென்வழிபாட்டினையும் இணைக்கும் நூலாக திருமுருகாற்றுப்படை விளங்குகிறது. குரவர் முதல் குறவர் வரையார் ,யார் எவரெவர் எக்குணம் என்று பாரமால் அருள் ஒன்றே அருளும் தெய்வமாக முருகனைப் படைத்துக் காட்டியுள்ளது இந்நூலினுடைய வழிபாட்டின் நோக்கம் எனக் கருதலாம்.

**பார்வை நூல்கள்:**

1. திருமுருகாற்றுப்படை - மு.பெ.சத்தியவேல்முருகனார்(உ.ஆ), உமா பதிப்பகம், சென்னை.
2. தெய்வங்களும் சமூகமரபுகளும் - தொ.பரமசிவன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3. முருகன் அல்லது அழகு - திரு.வி.க. பாரி நிலையம், சென்னை.
4. தொல்காப்பியம் - இளம்பூரணர் உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.